சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:22.02.2021

பி.வா.சா.3. பாலகுரு, த-பெ.ராமசாமிரெட்டியார்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் சென்னையில் வசிப்பதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனது அடையாள அட்டையில் நான் சென்னையில் வசிப்பதாக காட்டியுள்ளேன் என்றால் தற்போது வசிப்பதாக காட்டியுள்ளேன். வடமலைக்குறிச்சியில் வசிப்பதற்கு ஆவணங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சென்னை துறைமுகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். மத்திய அரசினுடைய சென்னை துறைமுகப் பொறுப்பு கழகம் என்று சொன்னால் சரிதான். எனது பணிப்பதிவேடு தற்சமயம் என்னிடம் உள்ளது. அதனை ஆஜர்படுத்தினால் நான் பணிபுரிந்த இடம் தெரியவரும் என்றால் சரிதான். அதில் எனது தந்தை பெயர் காட்டப்பட்ட விவரம் தெரியவரும் என்றால் நான் பார்த்து தான் சொல்லமுடியும். எனது தந்தைக்கு இரண்டு தாரம் என்று சொன்னால் சரியல்ல. லெட்சுமியம்மாள் முதல் மனைவி என்றும், சுப்புத்தாயம்மாள் இரண்டாவது மனைவி என்றும் சொன்னால் சரியல்ல. சுப்புத்தாயம்மாளின் பிள்ளைகள் வாதி குருவம்மாள், 1ம் பிரதிவாதியாகிய நான், 2ம் பிரதிவாதியாகிய கந்தசுப்பையா என்றால் சரிதான். லட்சுமியம்மாளுக்கு ராமசாமிரெட்டியார் மூலம் பிறந்த குழந்தை ராஜலட்சுமி என்று சொன்னால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சாந்தி வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. 6ம் பிரதிவாதி நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ராமசாமி ரெட்டியாரின் முதல் மனைவி லெட்சுமியம்மாள் மூலம் பிறந்த பெண்வழி பேத்தி என்று கூறிய விவரத்தை வழக்கறிஞர் சொல்லி தெரிந்துகொண்டேன். 7ம் பிரதிவாதி செந்தில்குமார் 6ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் என்று எதிர்வழக்குரையில் கூறிய விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு வழக்கறிஞர் சொல்லவில்லை. 6ம் பிரதிவாதியின் தகப்பனார், தாயார், தாத்தா ஆகியோர் பற்றி வடமலைக்குறிச்சியில் விசாரித்தீர்களா என்றால் விசாரிக்க அவசியமில்லை. 6,7 பிரதிவாதிகளின் உறவுமுறை விவரம் எனக்கு தெரியும் என்பதால் நான் விசாரிக்கவில்லை என்றால்

சரியல்ல. எனது தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் தற்போது நிரூபண வாக்குமூலத்தில் 23.04.1987ல் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன். அவர் இறந்தபிறகு யார்யாரை கூட்டுக்குடும்ப உறுப்பினர்களாக கொண்டும் மற்றும் எந்தெந்த சொத்துக்களை கொண்டும் கூட்டுக்குடும்பம் ஏற்படுத்தப்பட்டது என்று எதிர்வழக்குரையில் கூறியிருக்கிறேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. கூட்டக்குடும்ப கர்தா யார் என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, கூட்டாக அனுபவித்து வருகிறோம். 10.11.1980ம் ஆண்டு விருதுநகர் இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்திற்கு நான் போயிருக்கிறேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து போடுவேன். வடமலைக்குறிச்சியைச் சேர்ந்த சுப்பா ரெட்டியார் மகன் ராமசாமி ரெட்டியாரை தெரியுமா என்றால் தெரியாது. எனது சகோதரர் கந்தசுப்பையனின் கையெழுத்து தெரியுமா என்றால் பார்த்தால் தெரியும். 8ம் பிரதிவாதி பாக்கியலட்சுமி கந்தசுப்பையனின் மனைவி ஆவார். பாக்கிலெட்சுமியின் கையெழுத்து பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் 10.11.1980 தேதியிட்ட ஆவணத்தில் பின்பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 3வது பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி பக்கங்களில் கந்தசுப்பையன் மற்றும் பாக்கிலெட்சுமியின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. 1980ம் வருடத்திய என்னுடைய கையெப்பம் அடங்கிய ஆவணம் எங்கு உள்ளது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து நிபுணரிடம் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையொப்பம் பாக்கியலெட்சுமியின் கையெழுத்தா என்றால் இல்லை. 10.11.1980ம் தேதி கந்தசுப்பையனும், பாக்கியலெடசுமியும் ஜாதி வழக்கப்படி விவாகரத்து செய்துகொண்டார்கள் என்று அந்த வகைக்கு விருதுநகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றும் அதில் நானும் சுப்பா ரெட்டியார் மகன் ராமசாமி ரெட்டியாரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது சொத்துக்களை பொறுத்து ஏற்பாடு செய்திருந்தார் என்றும் அதன்படி

கந்தசுப்பையாவிற்கு 1முதல் 16 இலக்க சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது பணிப்பதிவேட்டில் எனது தகப்பனார் பெயர் முரண்பட்டு காட்டப்பட்டிருப்பதால் கூட்டுக்குடும்ப சொத்தில் எனக்கு பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. பணிஓய்வு பெற்றுவிட்டதால் எனது சகோதரியை தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த வருடம் பணிஓய்வு பெற்றேன் என்றால் 2010ம் ஆண்டு பணிஓய்வு பெற்றேன். நான் வாதியுடன் சேர்ந்து குடும்ப ஏற்பாட்டை சிதைக்கும் விதமாக வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல.

(3,4,8 பிரதிவாதிகள் மற்றும் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)